# டாக்டர் ஆர்.ஏ.என்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் "B+" சான்று பெற்றது - பாரதியார் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் பெற்றது)

ரங்கம்பாளையம், ஈரோடு - 638 009.

## தமிழ்த்துறை,

## உலகத் தமிழ்க் காப்பிய ஆராய்ச்சி நிறுவனம், மலேசியா

## சுடர்மணி பதிப்பகம், சென்னை.

காப்பியம்

சுடர்மணி பதிப்பகம்

## பன்னாட்டு கருத்தரங்கம் - 31.01.2025

# சான்றிதழ்

**"தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்"** எனும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கில்

திரு / திருமதி / செல்வி / முனைவர் தி. கீதாஞ்சலி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி அவர்கள்

திலகவதி சிறுகதைகளில் பெண்களின் வாழ்வியல்


எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கினார் / பங்கேற்றார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

முனைவர். **ச.வேணுகோபால்**
ஒருங்கிணைப்பாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஏ.என்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு.

பேரா. **அ.கீதா**
உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை,
டாக்டர் ஆர்.ஏ.என்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு.

முனைவர் **அ. பழனியப்பன்**
கல்லூரி முதல்வர், டாக்டர் ஆர்.ஏ.என்.எம்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு.

Scanned with CamScanner



# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

## பன்னாட்டுக் கருத்தரங்கம் - தொகுதி - 1

தொகுப்பாசிரியர்
முனைவர் ச.வேணுகோபால்

**தொகுப்பு குழு**

பேரா.அ.கீதா, பேரா.ஆ.ரேவதி, பேரா.செ.குமார்,
பேரா.வி.நந்தினி, பேரா.கு.கீர்த்திகா,
பா.தனேசு, கு.மகாவீரபிரசாத்

Scanned with CamScanner








தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் மனித வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ளன. சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை, ஒவ்வொரு காலகட்டத்திலும் மக்களின் வாழ்வியல் நெறிமுறைகள், பண்பாட்டு மரபுகள், சமூக அமைப்புகள் ஆகியவற்றை விரிவாக ஆவணப்படுத்தியுள்ளன. இத்தகைய செழுமையான பாரம்பரியத்தை ஆராய்ந்து, அதன் தற்கால பொருத்தப்பாட்டினை ஆய்வு செய்யும் இக்கருத்தரங்கம் மிகவும் காலத்தின் தேவையாக அமைந்துள்ளது.

9 788197 342400

சுடர்மணி

sudarmanipathipagam@gmail.com

Scanned with CamScanner

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்


தொகுப்பாசிரியர்
முனைவர் ச.வேணுகோபால்

முதல் பதிப்பு : 2025

வெளியீடு : சுடர்மணி

23, 8வது மேற்கு தெரு, மேத்தா நகர் விரிவு,

குன்றத்தூர், சென்னை - 600069.

அலைபேசி : 9842730808

அச்சாக்கம் டுடே ஆப்செட், சென்னை

பக்கங்கள் - XX + 330 = 350

**விலை :ரூ .350/-**

TAMIL ILAKKIYANKALIL VALVIYAL

**Editor :**

**Dr.S.VENUGOPAL**

First Edition : **2025**

Published by **SUDARMANI**

No. 23, 8th West Street, Metha Nagar (Extn.)

Kundrathur, Chennai - 600069, Phone: 9842730808

e-mail: sudarmanipathipagam@gmail.com

Printed at : Today Offset, Chennai - 5.

Pages: XX+ 330 = 350 **Price : ₹ 350/-**

**ISBN : 978-81-973424-0-0**




Scanned with CamScanner

முனைவர் கா.கிருத்திகா - 255

46. இறைவனின் பிறப்பும், அவதார நோக்கமும்
குு.கிருத்திகா - 260

47. அகநானூற்றில் கலைகள்
முனைவர் த.கிறிஸ்டல் ரெஜி - 269

48. மாக்காளை நாவல் காட்டும் திரையரங்கு நிகழ்வு
சு.கீதா - 276

49. பழனி இராகுலதாசன் சிறுகதைகளில் சமூக முரண்கள்
முனைவர் ஏ.கீதா - 286

50. பாரதிதாசன் கவிதைகளில் தமிழ் - அ.கீதா - 292

51. கோத்தர் இனமக்களின் வாழ்வியல் நெறிகள்
முனைவர் கி.கீதா - 298

52. திலகவதி சிறுகதைகளில் பெண்களின் வாழ்வியல்
முனைவர் த.கீதாஞ்சலி - 305

53. தமிழ் வைணவ வாழ்வியலும் நம்மாழ்வாரும்
அ.குணசேகரன் - 313

54. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சங்க இலக்கியம்
கவியருவி ச.குமரவேல் - 318

55. சங்க கால மக்களின் சமூக வாழ்க்கை
செ.குமார் செல்வராஜ் - 328


Scanned with CamScanner

இருக்கும் தாவரத்தின் வாசனை ஆண்களை வசப்படுத்தும் தன்மை கொண்டது என்று கூறுகின்றனர். நிறைவாக,

கோத்தரினப் பழங்குடி மக்களின் பண்பாட்டில் நவீன வளர்ச்சியை விட மரபு சார்ந்த அறிவு பயன்பாட்டினைப் பெற்று விளங்குகின்றது. அதிக சமவெளிப் பகுதி மக்களிடம் கொண்ட தொடர்பின் காரணமாக மரபு சார்ந்து அவர்கள் செய்து வந்த செயல்கள் அனைத்தும் மறைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது ஒவ்வொரு நாட்டிலும் பழங்குடிகள் புணரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கொத்தடிமை ஒழிப்பின் வாயிலாக எண்ணற்றப் பழங்குடி மக்கள் மீட்கப்பட்டுள்ளனர். இந்த சமூகநல அமைப்புகளும் விழிப்புணர்வு கல்வி புகட்டி வருகின்றன. கிறிஸ்தவ நிறுவனங்களும் இவர்களின் வளர்ச்சியில் சிறப்பாகப் பங்காற்றி வருகின்றன. அவற்றில் இவர்களின் கல்விப் பணியும், மருத்துவப் பணியும் குறிப்பிடத்தக்கனவாகும்.



## 52.திலகவதி சிறுகதைகளில் பெண்களின் வாழ்வியல்

முனைவர் த.கீதாஞ்சலி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி.

முன்னுரை

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கிஇவ் வையம் தழைக்குமாம்”
(பாரதியார் கவிதைகள், புதுமைப்பெண், ப.204)

என்று அன்று பாரதி கண்ட கனவு, இன்று நனவாகிக் கொண்டுதான் இருக்கிறது.

“வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்”
(மேலது, பெண்கள் விடுதலைக் கும்மி,ப.207)

என்றான் பாரதி. அடிமையாய்ப் பிறந்து, அடிமையாக வளர்ந்து அடிமையாகவே மறைந்து விடும் பெண்ணினத்தின் அடிமைத்தனம் நீக்கப்பட்டு விடுதலை பெற்ற சமுதாயம் இருபத்தோராம் நூற்றாண்டில் ஆணுக்குப் பெண் அடிமையில்லை எனும் உரிமை உணர்வோடு சரிநிகர் சமானமாக எல்லா துறைகளிலும் ஈடுபட்டுள்ளது. பெண்களும் அறிவு நுட்பம் வாய்ந்தவர்கள் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு சமுதாயத்தில் பங்குகொள்ள வரும் பெண்கள் எத்தகைய சிக்கல்களை எதிர்கொள்ளகின்றர் என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

திலகவதியின் சிறுகதைகளில் பெண் சார்ந்த சமுதாயச் சிக்கல்களாகப் பெண்குழந்தை புறக்கணிப்பு, பாலியல் வன்முறை, பெண்சீண்டல், பணி மகளிர் சிக்கல்கள் ஆகியவை அமைகின்றன. அத்தகைய சிக்கல்களைப் பெண்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதும் அதனால் ஏற்படும் விளைவுகளும் விளக்கப்படவுள்ளன.

### பெண் குழுந்தை புறக்கணிப்பு

பெண் குழந்தையைப் பிறந்ததுமே கொன்று விடுவதைப் பெண்சிசுக் கொலை என்பர். மானுடப் படைப்பில் பாதியாக விளங்குகின்ற மனித உற்பத்தியின் அடிப்படையாகத் திகழ்கின்ற பெண்ணினம் மரபு வழிச் சிந்தனைகளாலும், சமூகக் கருத்தாக்கங்களினாலும் பிறக்கும்போதே வெறுத்து ஒதுக்கப்பட்டு, அழிக்கப்படுகின்ற



Scanned with CamScanner

அவலநிலை காணப்படுகின்றது. திருமணத்தில் பெண்ணுக்குக் கொடுக்கப்படும் சீர்வரிசை, மற்ற செலவுகள் போன்றவை பெண்ணைப் பெற்றவர்களுக்குப் பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் பெண்ணை வளர்ப்பதற்கும், மணம் முடித்துக் கொடுப்பதற்கும் போதிய வசதி இல்லாத பெற்றோர் பெண் குழந்தை பிறப்பையே வெறுக்கின்றனர்.

“பெண் குழந்தையாகக் குடும்பத்தில் பிறந்ததுமே வேண்டாத உருவம் ஒன்று குடும்பத்தில் வந்து விட்டதாகக் குடும்பத்தவர் அனைவரும் கருதிக் கொள்கின்றனர். அன்றே, வேண்டாத பெரிய பொறுப்பு ஒன்று வீட்டுக்குள் புகுந்து விட்டதாகவும் குடும்பத்தில் எண்ணிக் கொள்ளுகின்றனர். பெற்ற தாயும் அவ்வாறு கருதும் கேவல நிலைக்குச் சமூக அமைப்பு இறங்கிவிட்டது (செ.கணேசலிங்கன், பெண்ணடிமை தீர, ப.15) என்பர்.

இந்தியாவில் பல பகுதிகளில் பெண் குழந்தைகள் பிறந்தவுடன் அவர்களைக் கொல்லும் பழக்கம் வழக்கில் இருந்தது. இக்கொடுமையைப் பொரும்பாலும் அக்குழந்தையின் உறவினர்களே புரிந்து வந்தனர். ஒரு பெண் குழந்தை பிறந்து வளர்ந்து தன் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் வெவ்வேறு விதமான துன்பங்களை அனுபவிப்பதற்கு மாறாக, அவளைப் பிறந்தவுடன் கொன்று விடுவதே அவள் வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் தீர்வாக அமையும் என்று கருதியே அவர்கள் இம்முறையைக் கடைப்பிடித்தனர். பெண் குழந்தை என்று தெரிந்தவுடனேயே அதற்கு எருக்கம்பாலையும் கள்ளிப்பாலையும் கொடுக்கப் பெண்ணே தயாராக இருக்கின்றாள். சமூகம் அறியாமை இருளில் மூழ்கி இருந்ததே இதற்குக் காரணம்.

ஆண் குழந்தை என்றதும் இந்தச் சமுதாயத்தில் பெரும் மதிப்பையும், மரியாதையையும் தருகின்றார்கள். பெண் குழந்தை என்றவுடனே, அதனால் இந்தச் சமுதாயத்திற்கே ஏதோ பொல்லாத கேடு விளையப் போகிறது என்று நினைக்கும் தாழ்வான மனப்பான்மை இன்றும் வளர்ந்து வருகிறது. இக்கருத்துத் தவறானது என்பதைத் திலகவதி தன் கதையின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

உதைத்தாலும் ஆண்மக்கள் எனும் கதையில்





மருத்துவரான சுகந்தியின் வீட்டில் வேலை பார்க்கும் கும்மியம்மாளின் மருமகளுக்கு இரண்டாவது பிரசவத்திலும் பெண் குழந்தை பிறக்கிறது. தன் கணவனுக்கு அஞ்சியும், சீர்முறைகள் மற்றும் செலவுகளுக்கு அஞ்சியும் குழந்தையைக் கொல்லச் சொல்கிறாள். அதனை விரும்பாத கும்மியம்மாள் தன் மருமகளிடம், “நம்ப டாக்டரம்மாவைப் பாரு பொம்பிளதான். அந்தம்மா எறங்கி நடந்தா ஊரு முச்சூடும் கை எடுத்துக் கும்பிடுது. அந்த மவராசி இல்லன்னா நீயே கூட இப்ப உசுரோடு இருக்கமாட்ட, பொம்பளைன்னா என்ன ஏப்பசாப்பையாவா போச்சு! நாளைக்கு ஒம்மவளும் நல்லாப் படிச்சு அந்தம்மாளாட்டம் ஆவக்கூடாதா?” (திலகவதி கதைகள், பக் 45,46) என்று கூறியதும் அவளின் அறிவுரையை ஏற்று மருமகள் மனம் மாறுகிறாள்.

இன்று பல துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் முன்னேறி வருகின்றனர். இறைவன் படைப்பில் மனிதன் என்ற நிலையில் வேற்றுமை பாராட்டக் கூடாது. படிக்காத பாமர மக்கள் அறியாமை காரணமாகப் பெண் பிறப்பையே பாரமாகக் கருதி வந்தனர். அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இக்கதையை ஆசிரியர் படைத்துள்ளார் என்பது தெளிவாகிறது.

### குழந்தைத் தொழிலாளர்கள்

உலகத்தைப் புரிந்து கொள்ளுவதற்குத் தெரிந்து கொள்ளும் முன்னரே உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாகிய அப்பாவிச் சிறுமிகளின் அவலத்தை வெளிக்கொணரும் விதமாக கதைகளைத் திலகவதி படைத்துள்ளார்.

“அறிவியலில் 7 வயது முதல் 18 வயது உடையாரை இளம் வயதினராக, சிறுவராகக் குறிப்பிடுகின்றனர். இவர்களுள்ளும் 14 வயது வரம்புகள் அடங்குவோர் குழந்தைகளாகவும் அதற்கு மேற்பட்டோர் (14 முதல் 18 வரை) இளம் வயதினர் ஆகவும் குறிக்கப்படுகின்றனர்” (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-4, ப.450)

இவற்றினின்றும் “வாழ்க்கை பற்றிய தெளிந்த கண்ணோட்டத்தினைப் பெறாத நிலையில் வாழ்க்கையின் பொறுப்பினை, கடமையினை உணர்ந்து அதற்கேற்பச் செயல்படத் தொடங்குவதற்கு முன்னதாக அமையும் இப்பருவத்தினரை, வயதினரை (7முதல் 18 வரை) சிறார்



Scanned with CamScanner

எனக் கொள்ளலாம்" (ந.கடிகாசலம்(பதி), சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு, ப.21) என்பர்.

இயந்திரத் தொழிலின் பெருக்கமும், கூலிச் சுரண்டற் கொள்கையும் உழைப்புச் சுரண்டலின் வன்மையும் குழந்தைத் தொழிலாளரை உருவாக்கியுள்ளன.

வீட்டு வேலைக்குச் செல்லுதல்

வறுமை காரணமாகச் சிறுமிகளை வசதி படைத்த வீடுகளுக்கு வீட்டு வேலை செய்யப் பெற்றோர்கள் அனுப்பி வைத்துவிடுகின்றனர். அவ்வீடுகளில் தன் வயதொத்த பிள்ளைகள் பயன்படுத்தும் பொருட்கள், உடைகள் ஆகியவற்றைப் பார்த்து ஏழைக் குழந்தைகள் ஏக்கம் கொள்கின்றனர் மனவேதனைக்கும் ஆளாகின்றனர்.

உயிரின் நிறம் எனும் கதையில் எட்டு வயது பாலாமணி, தன் வயதொத்த பிரியாவைக் கவனிப்பது, குளிப்பாட்டுவது, விளையாட்டுக் காட்டுவது என அனைத்து வேலைகளையும் செய்கிறாள். பிரியாவின் தாயார் அவளின் பிறந்த நாளுக்காகச் சிறுவர்களுக்குப் பரிசுப் பொருட்கள் கொடுக்க வேண்டி வண்டுப்பெட்டி வைத்திருக்கிறாள். அப்பெட்டி பாலாமணிக்கு மிகவும் பிடித்திருந்த காரணத்தால் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டே இருக்கிறாள். நிகழ்ச்சி முடிந்ததும் ஒரு பெட்டி மட்டும் மீதம் இருக்கிறது.

அந்தப் பெட்டி தனக்குக் கிடைக்கும் என்ற ஆசையில் இருந்த பாலாமணியின் கையில் வண்டுப்பெட்டிக்குப் பதிலாகப் பிரியாவின் தாய் பணத்தைக் கொடுக்கிறாள். ஏமாற்றமடைந்த அவள் தன் தந்தையிடம், "அப்ப எனக்கு வண்டுப்பெட்டி கிடையாதா? இது தானா அவங்க எனக்குத் தர்ர கி∴ப்ட்? சின்னப் பசங்களுக்கெல்லாம் தர்ரதுக்குன்னுதானே கி∴ப்ட் பொட்டலம் கட்டினாங்க. நான் மட்டும் சின்னப் பசங்களோட சேர்த்தியில்லையா?" (திலகவதி கதைகள், ப.27) என்று கூறி அழுகிறாள். அவன் கண்களிலும் நீர் வழிகிறது. ஆனால் அவளின் அம்மா பாலாமணியைத் திட்டிவிட்டுப் பணம் கிடைத்திருப்பதை எண்ணி மகிழ்கிறாள்.

இக்கதையில் பள்ளி செல்ல வேண்டிய வயதில் வசதி படைத்த வீட்டில் பணிபுரியும் ஏழைப் பெண்குழந்தையின் மன ஏக்கங்களையும், வறுமை





நிலையை உணர முடியாத குழந்தையின் மனநிலையையும் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

பால்சார் அலைக்கழிப்பு

வீட்டிலிருக்கும் பெண்களும், கல்வி கற்பதற்காகவும் பணியின் பொருட்டும் வீட்டைவிட்டு வெளியில் வந்த பெண்களும் பால்சார் அலைக்கழிப்பினால் துன்புறுவதைச் சிறுகதைகள் எடுத்தியம்புகின்றன.

"ஆண் எனும் மேலாதிக்கத்தை, அதிகாரத்தை நிலைநிறுத்தும் நோக்குடன், பெண்ணைக் கவர்ச்சிப் பொருளாகக் காணுதல், ஆபாசப் பேச்சால் இழிவு படுத்துதல், தீண்டுதல், உடலின்ப நோக்குடன் தழுவுதல், பாலியல் வன்முறைச் செயல்களில் ஈடுபடுதல் போன்ற ஆடவரது செயல்கள் பால்சார் அலைக்கழிப்புச் செயல்களாகும்" (தேவதத்தா தி.கமலி, பெண்ணியக் கலைச் சொல் விளக்கக் கையேடு, ப.85) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலியல் வன்முறை

பெண்ணைக் கணவனைத் தவிர வேறு எவனும் வன்முறையில் தீண்டிவிட்டால், பெண் தனது புனிதத்தன்மையினை இழந்து விடுகிறாள் என்னும் மரபுவழி உணர்வு இன்றும் நீடித்து வருகிறது. ஆண்களைவிடப் பெண்களிடமே இவ்வுணர்வு அழுத்தம் பெற்றுள்ளது. பெண்கள் இயல்பாக வெளியே சென்றுவர முடியாத அளவிற்குக் கற்பிழப்பு உணர்வைச் சமூகம் வலிமையான வேலியாக்கிவிட்டது.

பாலியல் பலாத்காரம் என்ற கொடுமையும் பெண்களுக்கு ஆண்டாண்டு காலமாய் நடைபெற்று வருகிறது. "நம் நாட்டில் ஒவ்வொரு 34 நிமிடத்திற்கு ஒரு பாலியல் பலாத்காரமும், ஒவ்வொரு 45 நிமிடத்திற்கு ஒரு பெண் கடத்தப்படுவதும் ஒவ்வொரு நிமிடத்திற்கு ஒரு ஈவ்டீசிங் கொடுமையும் நடைபெறுகின்றன என்ற தேசிய குற்றப்பதிவுத் துறையின் அறிக்கை மேற்சொன்னவற்றை உறுதிப்படுத்துகிறது" (இரா.வெங்கடேஷ், தினமணி நாளிதழ் 17.12.2003, ப.9) இதன்படி பாலியல் வன்முறையால் பெண்கள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர் என்பது புலனாகிறது. பாலியல் வன்முறையால் ஏற்படும் விளைவுகளைத் திலகவதி தன் கதைகளில் எதிரொலிக்கிறார்.



Scanned with CamScanner

### பணி இடத்தில் வஞ்சிக்கப்படுதல்

படிப்பறிவில்லாத பெண்கள் வறுமை காரணமாக சிறுவயதில் வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்படுகின்றனர். அவ்வீட்டில் உள்ள ஆண்கள் அப்பெண்ணின் வறுமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு வீட்டில் யாரும் இல்லாத வேளைகளில் தன் காமஇச்சைக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

"தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் அதிகப்படியாக ஒரு துண்டு ரொட்டியைச் சம்பாதிப்பதற்காக மிகக் குறைந்த அளவு சம்பளத்திற்குப் பெண்கள் வேலை செய்யத் தயாராயிருக்கிறார்கள். இவர்களிலிருந்துதான் முதலாளிகள் தமக்கு மிகவும் சாதகமான நிலையில் எண்ணற்ற காமக்கிழத்திகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர்." (வி.இ.லெனின், மாதர் விடுதலை பற்றி, வி.இராதாகிருஷ்ணன் (மொ.ஆ)., பக்.46,47) என்ற கருத்தின் மூலம் பெண்கள் பணியிடங்களில் வஞ்சிக்கப்படுவதை அறிய முடிகிறது.

பாக்கியம் எனும் கதையில் பருவ வயதில் வறுமை காரணமாக வீட்டு வேலைக்குச் செல்லும் பெண்கள் அனுபவிக்கும் பாலியல் கொடுமைகளை எடுத்துக் கூறுகிறார். பிரேமா குடும்ப வறுமைநிலை கருதி ஒரு வீட்டில் வேலைக்கு விடப்படுகிறாள். ஒவ்வொரு முறையும் வீட்டுக்கு வரும்போது பல பொருட்களைக் கொண்டு வருவாள். அவளின் வருமானத்தில் குடும்பம் கவலையின்றி நகர்கிறது. ஒரு நாள் பழந்துணி, திண்பண்டங்கள், மூன்று மடங்கு பணம் என்று இரண்டு வேலையாட்களுடன் அனுப்பப்படுகிறாள்.

ஆனால் அவள் பழைய நிலையில் இல்லை. பைத்தியம் போல் நடந்து கொள்கிறாள். ஒரு முறை, "வாண்டாண்டா! நா ஒனக்கு பொண்ணாட்டம், கிட்ட வராதடா! கொதறிப்பிடுவேன். வாண்டாண்டா! ஒங்கண்ணெல்லாம் பஞ்சடைச்சிரும்பா! வீணா அளிஞ்சு போவாதே!.." (திலகவதி கதைகள், ப.153) என்று கதறுகிறாள். வாந்தி எடுக்கிறாள். குடும்பத்தினரால் என்ன நடந்திருக்கும் என்று உணர முடிந்ததே தவிர வேறு எதுவும் செய்ய இயலவில்லை. குறைப் பிரசவத்தில் இறந்து விடுகிறாள். குடும்பத்தில் வறுமை சூழ்ந்து கொள்கிறது.

அதனால் அவளின் தங்கை பாக்கியத்தை வேறு





வழியில்லாமல் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்கு அனுப்புகின்றனர். அங்கு முதலாளியின் கொடுமை நாளுக்கு நாள் அதிகமாகிறது. அவ்விடத்தை விட்டுத் தப்பித்து வந்து விட வேண்டும் என அவள் எண்ணுகிறாள். பாக்கியத்தின் வருமானத்தை நம்பி குடும்பத்தினர் வாழ்வதைக் கண்டு மீண்டும் அந்த இடத்திற்கே வேலைக்குச் சென்று விடுகிறாள்.

கல்வியறிவில்லாத, வறுமையில் துவளும் பெண்கள் வீட்டு வேலை செய்து தற்சார்புடன் வாழ முன்வருகின்றனர். ஆனால் பெண்ணின் அழகும் இளமையும் ஆண்களின் கண்களுக்குப் போகப் பொருளாகப்படுகிறது. அதன் காரணமாக ஆண்களால் பெண்களின் வாழ்வு சிதைக்கப்படுகிறது என்பதை இக்கதையின் மூலம் சுட்டுகிறார்.

இந்தியாவில் கற்பு என்பது பெண்களுக்கு மட்டும் உரிய ஒழுக்கமாக நெடுங்காலமாக எண்ணப்பட்டு வந்திருக்கின்றது. இதன் காரணமாகவும் பெண்களுக்குப் பாலியல் வன்முறைகள் நேருகின்றன. அத்துடன், "பெண்கள் தம்மிலும் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் ஆண்களது நனவிலி மனத்தில் கருத்தியலாகப் பதிந்துள்ளது. அதனால்தான், பெண்களை உற்றுப் பார்த்தல், கேலி செய்தல், தனித்த இடங்களில் பாலியல் செயல்களை வெளிப்படுத்துதல், வாய்ப்பான இடங்களில் வன்முறைகளில் ஈடுபடல், கற்பழித்தல் முதலான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன." (பாக்யமேரி, பண்ணன் புதினங்களில் சமுதாய மாற்றம், ப.110) என்ற கருத்தும் சிந்திக்கத்தக்கது.

பெண்களைவிட தாம் உயர்ந்தவர்கள் என்ற கருத்தியலுடன் பொருளாதார, அதிகார, ஆதிக்க பலங்களும் சேரும்போது ஆண்கள் தம்மை மிகுந்த வலிமையுடையவர்களாக உணர்கின்றனர். அதனாலேயே உடல் வலிமை பெற்ற சில ஆண்கள், மென்மைத் தன்மை கொண்ட பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தக் காரணமாக அமைந்துவிடுகிறது. பாலியல் வன்கொடுமைகளால் பெண்கள் மிகுதியும் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர்.

ஆண்களால் நிகழ்த்தப்பெறும் இக்கொடுமையை எதிர்த்துப் போராடும் ஆற்றலைச் சமுதாயம் பெண்ணுக்கு வழங்கவில்லை. பாதிப்புகள் நேரும்போது பெண்களுக்கு



Scanned with CamScanner

அவமானமும், கண்ணீரும்தான் மிஞ்சுகின்றன என்பது புலனாகிறது. சமுதாயத்தில் இருவேறு நீதிகள் நிலவுவதையும் எடுத்துக்காட்டியுள்ளார். பெண்கள் வேலைக்குச் செல்வதால் பொருளாதார பலம் பெறுவது உண்மையாயினும், ஆண்களால் வேறுபல சிக்கல்கள் தோன்றுவதும் இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகின்றது.



## 53.தமிழ் வைணவ வாழ்வியலும் நம்மாழ்வாரும்

அ.குணசேகரன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

பழங்காலந்தொட்டே தமிழ்நிலம், சமூக அமைப்பு, அரசியல், பண்பாடு, கலை, தத்துவம், சமயம் போன்ற பல களங்களிலும் தனக்கெனத் தனித்ததொரு மரபைப் பேணி வந்திருக்கிறது. பிற நிலங்களிலிருந்து வந்து பரவிய பண்பாடுகளாய் இருந்தாலும் அவை தமிழ் நிலத்தின் தனித்தன்மைக்கேற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்கின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தின் பொதுப்போக்கு தமிழ் மண்ணையும் ஆட்கொண்டாலும் கூட அப்போக்கு இம்மண்ணுக்கான மரபுகளோடே மாற்றம்பெற்று வந்திருக்கின்றன. குறிப்பாகச் சமய மரபுகள் இந்தியத் துணைக்கண்டத்தின் மற்ற பகுதிகளில் வழங்கும் மரபுகளிலிருந்து பல்வேறு வகைகளிலும் மாறுபட்டே அமைகின்றன. பௌத்தம், சமணம், சைவம், வைணவம் என எந்தச் சமய மரபுகளும் இந்தப் போக்கிற்கு விதிவிலக்கல்ல.

தமிழகத்தில் நிலவிவந்த வழிபாட்டு மரபுகள் வைதீக மரபுகளோடு தொடர்புப்படுத்தத் தொடங்கிய காலந்தொட்டு இங்கு நிலவிய மாயோன் அல்லது மால் வழிபாடு கண்ணனோடு தொடர்புபடுத்தப்பட்டு வந்துள்ளது. விஷ்ணுவின் ஏனைய அவதாரங்களைக் காட்டிலும் கண்ணன் என்கிற அவதாரக்கதை தமிழ் நிலத்தில் பரவலாகப் பேசப்படுவதற்கு இதுவே காரணம்.

ஆழ்வார்கள் தொடங்கிப் பாரதியார் வரை கண்ணன் என்கிற அவதாரத்தின் அளவுக்கு மற்றெந்த அவதாரமும் அவர்கள் நெஞ்சை நிறைக்கவில்லை. ஏனெனில் தமிழ் நிலத்தின் பண்பாட்டு மரபுகளோடு தொடர்புபடுத்திக் கொள்வதற்கான ஏராளமான சாத்தியங்கள் கண்ணன் என்கிற அவதாரக் கதைகளில் பரவியிருந்தன. இந்தப் பின்புலத்தில்தான் ஆழ்வார்களின் தமிழ் வைணவ பக்தி மரபைப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

சங்க இலக்கியம் தொட்டே வைணவம் ஆங்காங்கு வழக்கிலிருந்ததற்கான பதிவுகள்